## சிறப்புத் தீர்மானம் - இணைப்பு (Annexure)

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
சட்ட திட்ட விதிமுறைகளில் செய்யப்படும் மாற்றங்களும், திருத்தங்களும்,
கழக செயற்குழுவில் ஏகமனதாக ஒப்புதலைப் பெற்று ஏற்றுக்கொள்ளப்படுதல்.**

| *அமலில் உள்ள<br>சட்ட திட்ட விதிமுறைகள்* | *திருத்தங்கள் செய்ய முன்மொழியப்படும்<br>சட்ட திட்ட விதிமுறைகள்* |
|---|---|
| **விதி – 20 (அ) ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்**<br>**பிரிவு – 2:**<br>கழக ஒருங்கிணைப்பாளர் மற்றும் கழக இணை ஒருங்கிணைப்பாளர் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். | **விதி – 20 (அ) கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர்**<br>**பிரிவு – 2:**<br>**"கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர், கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேற்படி, கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் இருவரையும், கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் ஒற்றை வாக்கின் மூலம் (Single Vote) இணைந்தே தேர்வு செய்யப்படுவார்கள்."** |
| **விதி – 43 : திருத்தம்**<br>கழக சட்ட திட்ட விதிகளை இயற்றவும் – திருத்தவும் – நீக்கவும் பொதுக்குழு அதிகாரம் படைத்ததாகும். | **விதி – 43 : திருத்தம்**<br>கழக சட்ட திட்ட விதிகளை இயற்றவும் – திருத்தவும் – நீக்கவும் பொதுக்குழு அதிகாரம் படைத்ததாகும். **"ஆனால் இந்த சட்ட திட்டங்களின் அடிப்படை உணர்வாக உருவாக்கப்பட்டுள்ள கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை, கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியை மட்டும் மாற்றுவதற்கோ, திருத்துவதற்கோ உரியதல்ல."** |

| *அமலில் உள்ள சட்ட திட்ட விதிமுறைகள்* | *திருத்தங்கள் செய்ய முன்மொழியப்படும் சட்ட திட்ட விதிமுறைகள்* |
| --- | --- |
| **விதி – 45 : ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளருக்கு அதிகாரம் :-** மேலே கூறப்பட்டுள்ள சட்ட திட்ட விதிகளில் எந்த விதியைத் தளர்த்துவதற்கும், விதி விலக்கு அளிப்பதற்கும் கழக ஒருங்கிணைப்பாளர் மற்றும் கழக இணை ஒருங்கிணைப்பாளருக்கு முழு அதிகாரம் உண்டு. | **விதி – 45 : கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் அதிகாரம் :-** மேலே கூறப்பட்டுள்ள சட்ட திட்ட விதிகளில் எந்த விதியையும் தளர்த்துவதற்கும், விதி விலக்கு அளிப்பதற்கும் கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளருக்கு முழு அதிகாரம் உண்டு. **“ஆனால், இந்த சட்ட திட்டங்களின் அடிப்படை உணர்வாக உருவாக்கப்பட்டுள்ள கழக ஒருங்கிணைப்பாளர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை, கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியை மட்டும், விலக்கு அளிப்பதற்கோ, தளர்த்துவதற்கோ அதிகாரம் இல்லை.’’** |

**முன்மொழிபவர்கள் :**

**திரு. கே.பி. முனுசாமி, M.L.A., அவர்கள்**
கழக துணை ஒருங்கிணைப்பாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. ஆர். வைத்திலிங்கம், M.L.A., அவர்கள்**
கழக துணை ஒருங்கிணைப்பாளர், கழக அமைப்புச் செயலாளர்
தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. திண்டுக்கல் C. சீனிவாசன், M.L.A., அவர்கள்**
கழக வழிகாட்டுக் குழு உறுப்பினர், கழக அமைப்புச் செயலாளர்
திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. K.A. செங்கோட்டையன், M.L.A., அவர்கள்**
கழக அமைப்புச் செயலாளர்
ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. C. பொன்னையன் அவர்கள்**
கழக அமைப்புச் செயலாளர்
கழக செய்தித் தொடர்பாளர், முன்னாள் அமைச்சர்

**டாக்டர் அ. தமிழ்மகன் உசேன் அவர்கள்**
அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர்
முன்னாள் தலைவர், தமிழ் நாடு வக்ஃபு வாரியம்

**திரு. ப. தனபால், M.L.A., அவர்கள்**
தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர்

**வழிமொழிபவர்கள் :** **அனைத்து செயற்குழு உறுப்பினர்களும்**